**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-050420213820

Volume: 5

Issue: 4

Month: April

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.01.2021

Accepted: 05.03.2021

Published: 01.04.2021

Citation:
Abdullah, MMA, et al. "Undergraduate Students' Reading Habit: A Study Based on Department of Islamic Studies at South Eastern University of Sri Lanka." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 4, 2021, pp. 61–73.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i4.3820

*Corresponding Author:
abdullahmma416@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Undergraduates' Reading Habit: A Study Based on South Eastern University of Sri Lanka

**M.M.A Abdullah**
*Specialization Student, Islamic Law and Legislation Unit*
*Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*
*Oluvil, Sri Lanka*
https://orcid.org/0000-0001-5022-2806

**M.Y.M Farhan**
*Department of Islamic Studies*
*South Eastern University of Sri Lanka, Sri Lanka*

**S.M.M Mazahir**
*Senior Lecturer, Department of Islamic Studies*
*South Eastern University of Sri Lanka, Sri Lanka*

**Abstract -** Reading makes a man perfect and it is very essential component to University students. Hence, students face various obstacles in developing reading habits. Therefore, with the aim of assessing students' reading habits and identifying the changes and the factors influenced when they pursue education through online learning tools due to corona fears, the study was conducted with second year students of Department of Islamic Studies of South Eastern University of Sri Lanka. For this study, which was carried out using quantitative research methods, a filled questionnaire was obtained as primary data from 121 of the 174 students studying in the year through Google Forms, analyzed through MS Excel and the results were described. Secondary data such as research articles, journals, and web articles related to the topic were also used. At the end of the study, it was found that students' reading habit was healthy, the amount of time they spent on daily reading varied, their reading habits have declined due to continuing education through online from home and factors such as lack of library, difficulty in reading on electronic devices, home works, social media, laziness, workload, sleepiness and increase in data cost have more influence on their reading decline, they have the habit of reading from both hard and soft sources, most of them use their smartphones to read the soft copy, while reading through electronic devices they face various problems such as not being able to read for a long time, headache, numbness like reading a book in hand, boredom, inability to read small letters, wasting more time and forgetting easily,. The conclusion of this study was that the continuation of educational activities from home had a negative impact on the reading habits of the students for various reasons. However, the positive change in their reading habits after entering university has been a motivating force for them to continue reading under any circumstances. At the same time, where guidance is provided to overcome challenges, they face in developing reading habits, further positive improvements can be expected in their reading habits.

**Key Words:** South Eastern University of Sri Lanka, reading, reading habit, undergraduate students.

**References**


1. Ameyaw, Samuel Kwame and Anto, Sylvester Kwabena. 2018. *Read or Perish: Reading Habits among Students and its Effect on Academic Performance: A Case Study of Eastbank Senior High School - Accra*. Library Philosophy and Practice (e-journal), 1748. https://digitalcommons.unl.edu/libphilprac/1748
2. Chettri, Kushmeeta. 2013. *Reading Habits - An Overview*, IOSR Journal of Humanities and Social Science, 14:13-17. http://www.iosrjournals.org/
3. Erdem, Aliye. 2015. *A Research on Reading Habits of University Students: (Sample of Ankara University and Erciyes University)*, Procedia - Social and Behavioral Sciences, Vol.174, pp.3983-3990, https://doi.org/10.1016/j.sbspro.2015.01.1145
4. Ziming, Liu. 2005. *Reading behavior in the digital environment: Changes in reading behavior over the past ten years*, Journal of Documentation, Vol.61, No.6, pp.700-712, https://doi.org/10.1108/00220410510632040
5. Ziming, Liu. (2005). *Reading behavior in the digital environment: Changes in reading behavior over the past ten years*. Journal of Documentation, vol. 61, no. 6, Jan. 2005, pp. 700-712, https://doi.org/10.1108/00220410510632040
6. Mashroofa, M.M. (2017). Vācippiṉ mukkiyattuvamum piḷḷaikaḷ mattiyil vācippuppaḻakkattai ūkkuvippathaṉ avasiyamum [The importance of reading and the need to promote reading among children], E-City College of English & IT Skills Development, March. 2017, http://www.ecitycollege.lk/
7. Mustafa, Mifrah. (2020). ‘Vāsipput thiṟaṉai virutti seyvataṟkāṉa 10 vaḻikaḷ’ [10 Ways to Develop Reading Skills]. Teachmore, https://www.teachmore.lk/2020/06/10_17.html
8. Segaran, Raja. (2016). Vācikkum paḻakkam [Reading Habit]. Bahasa Tamil UPSR, Feb. 2016. https://bahasatamilupsr.wordpress.com/2014/02/20/
9. Singh, Umrav. 2013. ‘A Study of reading habits among LIS students of Indore city. (M.P)’ [Unpublished Master’s thesis], Devi Ahilya Vishwavidyalaya, Indore, 2013, https://doi.org/10.13140/rg.2.1.3975.4720
10. Zunoomy, M.S. Shibly, F.H.A. & Asan, A.P.M. (2018). Nūlakattai upayōkippatil palkalaikkaḻaka māṇavarkaḷiṉ īdupāṭu: Ōr matippīṭṭāyvu ilaṅkai teṉkiḻakkup palkalaikkaḻakattai maiyappaṭuttiya āyvu [Involvement of university students in the use of the library: An Assessment Study based on the South Eastern University of Sri Lanka], Proceedings of 5th International Symposium on Sustainable Development through Arabic and Islamic Studies. 29 November 2018, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka, pp. 19-28. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3455

# இளங்கலை மாணவர்களின் வாசிப்புப் பழக்கம்: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு

*மு.ம.அ. அப்துல்லாஹ்*
சிறப்புக் கற்கை மாணவன், இஸ்லாமிய சட்டம் மற்றும் சட்டமியற்றல் பிரிவு
இஸ்லாமிய கற்கைகள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், இலங்கை

*மு.யா.மு. பர்ஹான்*
மாணவன், இஸ்லாமிய கற்கைகள் துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், இலங்கை

*ச.மு.மு. மஸாஹிர்*
சிரேஷ்ட விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்:**

*வாசிப்பு மனிதனை முழுமையாக்கும் என்ற வகையிலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அது அத்தியவசியமானது என்ற வகையிலும் அதுமுக்கியம் பெறுகின்றது. ஆனாலும் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதில் மாணவர்கள் பல்வேறுதடைகளை எதிர்கொள்கின்றனர். அந்தவகையில் மாணவர்கள், கொரோனா அச்சம் காரணமாக நிகழ்நிலைக் கற்கையூடாக கல்வியைத் தொடர வேண்டியேற்பட்டமையால் அவர்களது வாசிப்புப் பழக்கத்தை மதிப்பீடு செய்து அப்பழக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் அவற்றுக்கான காரணிகளைக் கண்டறியும் நோக்கில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியகற்கைகள் துறை இரண்டாம் வருடமாணவர்களை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அளவுசார் ஆய்வுவழிமுறையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்கான முதலாம் நிலைத்தரவாக 174 மாணவர்களுள் 121 மாணவர்களிடம் இருந்து* Google Forms*அள ஊடாக பூரணப்படுத்தப்பட்ட வினாக்கொத்துக்கள் பெறப்பட்டு, ஆளு* MS Excel *ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் விபரிக்கப்பட்டன. தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், மற்றும் இணையத்தளக் கட்டுரைகள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகளும் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் ஆரோக்கியமானதாகக் காணப்பட்டமையும் அவர்கள் தினசரி வாசிப்புக்காக செலவிடும் நேரம் மாறுபட்டுக் காணப்பட்டமையும் பல்கழைக்கழக நுழைவின் பின்னர் அவர்களின் வாசிப்பு அதிகரித்திருப்பதும்; வீட்டிலிருந்து நிகழ்நிலையூடாக கல்வியைத் தொடர்ந்தமையினால் அவர்களின் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்துள்ளமையும் நூலகம் இன்மை, இலத்திரனியல் சாதனங்களில் வாசிப்பது கடினம், வீட்டுவேலைகள், சமூக ஊடகங்கள், சோம்பல், வேலைப்பளு, தூக்கம்,* Data *செலவு அதிகரிப்பு போன்ற காரணிகள் அவர்களதுவாசிப்புகுறைவடைவதில் அதிகம் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையும், அவர்கள் வன்பிரதி, மென்பிரதி ஆகிய இரு மூலங்களிலும் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பதும் மென் பிரதியை வாசிப்பதற்காக தமது திறன் பேசிகளையே அதிகம் பயன்படுத்துவதும் இலத்திரனியல் சாதனங்களின் ஊடாகவாசிக்கும் போது நீண்ட நேரம் வாசிக்க முடியாமை, தலைவலி ஏற்படுதல், புத்தகத்தை கையில் எடுத்து வாசிப்பது போன்ற உணர்வின்மை, சலிப்பு, சிறிய எழுத்துக்களை வாசிக்க முடியாமை, நேரவிரயம், இலகுவில் மறந்துவிடல் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குவதும் கண்டறியப்பட்டது. வீட்டிலிருந்து நிகழ்நிலையூடாக கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்தமையினால் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டமையில் பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. எனினும் பல்கலைக்கழக நுழைவின்*

*பின்னர் அவர்களது வாசிப்புப் பழக்கத்தில் ஏற்பட்ட சாதகமான மாற்றமானது எவ்வகையான சூழலிலும் வாசிப்பைத் தொடர்வதற்கு உந்துசக்தியாக அமைந்திருக்கின்ற அதேவேளை வாசிப்புப் பழக்கத்தைப் விருத்தி செய்வதில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை முறியடிப்பதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படுமிடத்து அவர்களின் வாசிப்புப் பழக்கத் தில் மேலும் சாதகமான முன்னேற்றங்களை எதிர்பார்க் கமுடியும் என்பது இவ்வாய்வின் முடிவாகக் கொள்ளப்பட்டது.*

***திறவுச்சொற்கள்:*** *இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், வாசிப்புப் பழக்கம், இளங்கலை மாணவர்கள், இஸ்லாமியக் கற்கைகள் துறை*

## ஆய்வு அறிமுகம்

வாசிப்புப் பழக்கம் அறிவுவிருத்திக்கு இன்றியமையாததாகும் (Ameyaw and Anto 1). இப்பழக்கத்தை ஊக்குவிக்கவென பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மனிதவாழ்வில் மாணவப் பருவத்தில் தொடங்கி அவனது வாழ்நாள் முழுவதும் ஏதோ ஒருவகையில் தொடர்ந்து கொண்டிருக்கும் வாசிப்புச் செயன்முறையானது அவனது கற்றல் செயற்பாடுகளுக்கான முக்கிய கருவியாக அமையப்பெற்றுள்ளது (Erdem 3983). சிறுவயதில் வாசிக்கக் கற்றுக் கொள்ளும் ஒருமாணவன் அதனைப் பழக்கமாக மாற்றிக் கொள்ளும்போதே அவனது மொழி, ஆளுமை, அறிவு மற்றும் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்களவான வளர்ச்சி ஏற்படுகிறது (Skenderi and Ejupi 2835) அத்தோடு மனித வாழ்வின் அனுபவங்களை விரிவுபடுத்திக் கொள்ளவும் வாசிப்புப் பழக்கம் பாரிய அளவில் துணைபுரிகிறது (Chettri and Rout 13).

பொதுவாக அனைத்து மாணவர்களும் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்து கொள்வது விரும்பத்தக்கதாயினும் பல்கலைக்கழக மாணவர்கள் இப்பழக்கத்தைக் கொண்டிருப்பது மிக அவசியமானதாகும். ஏனெனில் ஒருநாட்டின் உயிர்நாடியாக அந்நாட்டின் பல்கலைக்கழகங்கள் அறியப்படுகின்றன. மேலும் ஒருநாட்டினுடைய தேசிய மூலதனமாக பல்கலைக்கழகங்களே உள்ளன. இந்தவகையில் பல்கலைக்கழகங்கள் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அச்சமூக மக்களுக்கு கல்வி வழங்குவதன் மூலம் அச்சமூகத்தின் பண்பாட்டு மரபினை வளர்க்கின்றன (Zunoomy et al. 20). எனவே, இப்பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்கள் தமதுவாசிப்புப் பழக்கத்தை அதிகரித்து, தம்மை வளர்த்துக் கொள்வதனூடாகவே எதிர்கால சமூகத்தை தலைமை தாங்கி வழிநடாத்திச் செல்லும் ஆளுமை மிக்கவர்களாகத் தம்மை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் வாசிப்பில் அதிக செல்வாக்குச் செலுத்துகிறது (Singh 28). இக்காலத்தில் அச்சிடப்பட்ட வளங்களுக்கு மேலாக இலத்திரனியல் வளங்கள் அதிகளவில் வெளியாகின்றன. அதாவது அச்சிடப்பட்ட சஞ்சிகைகள், பருவவெளியீடு, புதினத்தாள்கள் போன்று இப்போது தகவல்கள் கட்புல, செவிப்புல சாதனங்கள், இறுவட்டுக்கள், இணையம், இலத்திரனியல் புத்தகங்கள், இலத்திரனியல் சஞ்சிகைகள் போன்ற வித்தியாசமான வடிவங்களிலும், ஊடகங்களிலும் அதிகளவில் வெளியிடப்படுகின்றன (Hameem).

இவ்வாறு நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமான வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் பல காணப்பட்ட போதும் இவற்றின் செல்வாக்கின் மூலம் வாசிப்புப் பழக்கத்தில் பல பாதக விளைவுகளும் ஏற்படவாய்ப்புக்கள் உண்டு. சமூகவலைத்தளங்கள் மீதான அதிக ஈடுபாடு மற்றும் சினிமாவின் செல்வாக்கு போன்ற பல்வேறு காரணங்களால் வாசிப்பு மீதான மாணவர்களின் ஈடுபாட்டில் பல பாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதேபோல் இன்னும் பலகாரணிகளும் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் பாதிப்புச் செலுத்துகின்றன.

அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையும் அவற்றுள் முக்கியமான ஒன்றாகும் (Mustafa).

அண்மையில் உலகளாவிய ரீதியாக பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்திருக்கும் கொரோனா தொற்றின் விளைவாக இலங்கையின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் தடைப்பட்டமையின் காரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை நிகழ்நிலைக் கற்கையினூடாகத் தமது வீடுகளில் இருந்தே தொடர வேண்டியேற்பட்டது. ஆகவே, பல்கழைக்கழககல்விச் சூழல் இல்லாமை மற்றும் நூலக வசதி காணப்படாமை போன்ற பல்வேறு காரணிகள் அவர்களது வாசிப்புப் பழக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியிருக்கக் கூடும் என்ற வகையில் அவர்களது வாசிப்புப் பழக்கத்தை மதிப்பீடு செய்து அப்பழக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தியுள்ளகாரணிகள் தொடர்பில் ஆராய்வது இக்காலத்தில் மிகவும் அவசியமான ஒன்றாகும். இதனூடாக குறித்தகாலப பகுதியில் மாணவர்கள் தமதுவாசிப்புப் பழக்கத்தைக் கடைபிடிப்பதில் எதிர் கொள்ளும் தடைகளை இனங்கண்டு அவற்றை வெற்றிகரமாக முறியடிப்பதற்கான சிறந்த வழிகாட்டல்கள் வழங்கப்படமுடியும்.

## ஆய்வுப் பிரச்சினை

பல்கலைக்கழக மாணவர்கள் தமது வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியமானதாகும். பழ்கலைக்கழகச் சூழலில் தமது வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கான பல்வேறு வளங்கள் காணப்பட்டாலும் தமது வீட்டுச் சூழலில் வாசிப்புப் பழக்கத்தைத் தொடர்ந்தும் கடைபிடிப்பது மிகவும் சவாலான ஒன்றாகும். அந்தவகையில் கொரோனா தொற்றுக் காரணமாக தமது வீடுகளில் இருந்து கொண்டு நிகழ்நிலைக் கற்கை முறையூடாகத் தமது பாடங்களைக் கற்ற மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதே எமது ஆய்வுப் பிரச்சினையாகும்.

## ஆய்வு நோக்கங்கள்

1. பல்கலைக்கழக நுழைவின் பின்னரான மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மதிப்பீடு செய்தல்
2. தற்காலிகமாக வீட்டிலிந்து நிகழ்நிலைக் கற்கை முறையினூடாகக் கல்வியைத் தொடரும் குறித்த மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் மற்றும் அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிதல்.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது அளவுரீதியிலானதாகும். இவ்வாய்வுக்கான முதலாம் நிலைத்தரவுகளைப் பெறுவதற்காக வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. அத்தோடு இரண்டாம் நிலைத் தரவுகளாக தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளத் தகவல்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியகற்கைகள் துறை இரண்டாம் வருடத்தில் கல்வியைத் தொடரும் 174மாணவர்களில் 99 பெண்கள் மற்றும் 22 ஆண்கள் அடங்கலாக மொத்தமாக 121 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் வினாக்கொத்து Google Forms அள ஊடாக வழங்கப்பட்டன. பெறப்பட்டதரவுகள் MS Excel 365 ஊடாகப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுவரை கலைவிளக்கங்களின் துணையுடன் முடிவுகள் விபரிக்கப்பட்டுள்ளன.

## இலக்கிய மீளாய்வு

கடந்த காலங்களில் இத்தலைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை ஆய்வுக்கு உட்படுத்தியபோது மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிந்தது.

எனினும் குறித்த பிரதேசத்தையோ அல்லது வீட்டிலிருந்தவாறே நிகழ்நிலையூடாகத் தமது முழுமையான கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்ட மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மதிப்பீடு செய்யும் வகையிலான எவ்வித ஆய்வுகளும் இடம் பெற்றிருக்கவில்லை.

A research on reading habits of university students: (Sample of Ankara University and Erciyes University) எனும் தலைப்பில் Aliye Erdem என்பவரால் வெளியடப்பட்ட ஆய்வானது பல்கலைக்கழக மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாய்வுக்காக துருக்கி அங்காரா பல்கலைக்கழக மாணவர்கள் 225 பேர் மற்றும் ஏர்சீஸ் பல்கலைக்கழக மாணவர்கள் 101 பேர் உள்ளடங்கலாக 326 பேர் வினாக் கொத்துகள் வழங்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வின் முடிவில் குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஓய்வு நேரங்களில் நாவல்கள், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பதும் அந்நேரங்களில் இலக்கிய ஆக்கங்கள், வரலாறு, காதல், நகைச்சுவை மற்றும் உளவியல் சார்ந்தவற்றையே அதிகம் விரும்பி வாசிப்பதும் அதிகரித்த பாடங்கள், பரபரப்பான சமூக வாழ்க்கை, பரீட்சைக்குத் தம்மைத் தயார்படுத்தல் மற்றும் கணினி மற்றும் இணையத்துக்காக அதிகநேரம் செலவிடல் போன்ற பல்வேறு காரணங்களுக்காக வாசிப்புக்காக அவர்களின் மூலம் அதிகநேரம் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. எமது ஆய்வின் வினாக்கொத்தைத் தயாரிப்பதற்காக இவ்வாய்வு பெரிதும் துணைபுரிந்தது. எனினும் ஆய்வுப் பிரதேசம் மற்றும் நோக்கம் என்பவற்றில் இவ்வாய்வு வேறுபடுகிறது.

Reading behavior in the digital environment Changes in reading behavior over the past ten years எனும் தலைப்பில் Ziming Liu என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது தொழில் நுட்பசாதனங்கள் வளர்ச்சியடைந்துள்ள நவீன சூழலில் கடந்த பத்து ஆண்டுகளில் மக்களின் வாசிப்புப் பழக்கம் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதைப் பகுப்பாய்வு செய்வதனூடாக அவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நவீனதொழில் நுட்பசாதனங்களில் வாசித்த அனுபவம் கொண்ட 30 தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்டோரிடம் 250 வினாக்கொத்துக்கள் விநியோகிக்கப்பட்டு அவற்றில் 113 பூரணமாக நிரப்பப்பட்டு மீளப்பெறப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய நவீனதொழில் நுட்ப சாதனங்களின் துணை கொண்டு வாசிக்கும் நேரம் வெகுவாக அதிகரித்துச் செல்வதும் இம்முறையினுடாக வாசிக்கும் போது இணையத்தில் உலாவுதல் (browsing), திதவுச் சொற்களைக் குறித்தல் (keyword Spotting), ஒருமுறை மாத்திரம் வாசித்தல் (one-time reading), நேரியல் அல்லாத வாசிப்பு (non-linear reading), தேர்ந்தெடுக்கப்பட்டவற்றை மாத்திரம் வாசித்தல் (reading more selectively) போன்றவற்றுக்கு அதிக நேரம் செலவழிப்பதோடு ஆழமான வாசிப்புக்கு குறைவான நேரம் செலவழிக்கப்படுவதும் கணடறியப்பட்டது. அத்தோடு (இம்முறையினுடாக வாசிப்பதில்); தொடர்ந்து கவனம் செலுத்தி வாசிக்க முடியாமையும் அவதானிக்கப்பட்டது. அத்தோடு நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களின் காரணமாக இலத்திரனியல் சாதனங்களின் மூலமாக வாசிக்கும் பழக்கம் அதிகரித்து வந்தாலும் அச்சிடப்பட்ட புத்தகங்களை வாசிக்கும் பாரம்பரிய வாசிப்பு முறையானது இன்னும் டிஜிடல் சூழலுக்கு (முற்றாக) மாற்றமடையவில்லை என்பதும் கணடறியப்பட்டது. எமது ஆய்வின் கோட்பாட்டு அமைப்பை வரையறை செய்து கொள்வதற்கு இவ்வாய்வு துணைபுரிந்தாலும் ஆய்வுத் தலைப்பு, நோக்கம், பரப்பு மற்றும் பிரதேசம் என்பவற்றில் இவ்வாய்வு வேறுபடுகிறது.

The Reading Habits of University Students in Macedinia எனும் தலைப்பில் Lindita Skenderi மற்றும் Suzana Ejupi என்போரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது வடமேற்கு மெசடோனிய பல்கலைக்கழக மாணவர்களின் வாசிப்பு மட்டத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாய்வுக்காக்காக 149 மாணவர்களிடம் நிகழ்நிலையூடாக வினாக்கொத்துகள் விநியோகிக்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. ஆய்வின் முடிவில் குறித்த மாணவர்களிடம் போதியளவு வாசிப்புப் பழக்கம் காணப்படாமையும் அவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் வாசிக்க ஆர்வம் கொண்டுள்ளமையும் அவர்களில் பெரும்பாலானோர் காதல், வரலாறு மற்றும் பொருளாதாரம் சார் புத்தகங்களையே விரும்பி வாசிப்பதையும் அவர்களது வயதுடன் ஒப்பிடும்போது அவர்களது அறிவை வளர்த்துக் கொள்ள அது போதாமலிருப்பதும் சமூகவலையத்தளங்களின் பாவனை, நெருக்கடியான பாட அட்டவணை, நண்பர்களுடன் செலவழிக்கும் நேரம் மற்றும் வாசிக்க விருப்பமின்மை போன்ற பல்வேறு விடயங்கள் அவர்களது வாசிப்புக்குத் தடையாக இருப்பதும் குறித்த மாணவர்கள் அச்சிடப்பட்ட செய்தித்தாள்களை வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதும் பல்கலைக்கழக நுழைவின் பின்னர் அவர்களது வாசிப்பு மட்டத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதும் இவ்வாய்வினூடாகக் கண்டறியப்பட்டது. எமது ஆய்வுக்கான வினாக்கொத்தை வடிவமைப்பதற்கு இவ்வாய்வு பெரிதும் துணைபுரிந்தது. எனினும் ஆய்வுநோக்கம் மற்றும் பிரதேசம் என்பவற்றில் இவ்வாய்வு வேறுபடுகிறது.

மேற்கூறப்பட்ட ஆய்வுகள் இவ்வாய்வை மேற்கொள்ளத் துணைபுரிந்தாலும் பல்கலைக்கழக நுழைவின் பின்னரான மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மதிப்பீடு செய்து கொரோனா அச்சத்தின் விளைவாக திடீரென ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாகதற்காலிகமாக தமது கற்றல் நடவடிக்கைகளை முழுமையாக நிகழ்நிலையூடாக மேற்கொண்ட பல்கலைக்கழக மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் அவர்கள் எதிர்நோக்கிய சவால்களை இனங்காணுகிறது என்ற வகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

### பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் துறை இரண்டாம் வருடத்தில் கல்வியைத் தொடரும் 174 மாணவர்களில் 121 பேரிடமிருந்து நிரப்பப்பட்ட வினாக்கொத்துக்கள் பெறப்பட்டன. அதனை வரைபடம் 01 காண்பிக்கிறது.




இதற்கமைய இவ்வாய்வில் கலந்து கொண்டோரில் 82% ஆனோர் (99 பேர்) பெண்களும் 18% ஆனோர் (22 பேர்) ஆண்களுமாவர். அத்தோடு அவர்களுள் 92மூ ஆனோர் (111 பேர்) பொதுக்கற்கை மாணவர்களும் 8% ஆனோர் (10 பேர்) சிறப்புக் கற்கை மாணவர்களுமாவர். மேலுள்ள தரவுகளுக்கு இணங்க இவ்வருடத்தில் கற்கும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையில் எண்ணிக்கையில் பாரிய வேறுபாடுகள் நிலவுவதை அவதானிக்கலாம். பொதுவாக இத்துறை மாணவர்களிடையே பெண்களின் எண்ணிக்கையே மிக அதிகமாகக் காணப்படுகிறது. அதேபோக்கு இவ்வருட மாணவர்களிடமும் பிரதிபலித்திருப்பதை மேற்கூறியதரவுகள் ஊடாக அறிய முடிகிறது. கலைத்துறையில் ஆண்களைவிடப் பெண்களே அதிகநாட்டம் கொண்டவர்களாவர் என்பதே


இப்பாரிய வித்தியாசத்துக்கான காரணியாக இருக்கலாம்.

**வாசிப்புப் பழக்கம்**

இத்துறை மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஆராய்ந்த போது அவர்களில் 97% ஆனோரிடம் வாசிப்புப் பழக்கம் காணப்படுவதாகக் குறிப்பிட்ட அதேவேளை 3% ஆனோரேதங்களிடம் வாசிப்புப் பழக்கம் இல்லை எனக் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 02 காண்பிக்கிறது.




இதனூடாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் ஆரோக்கிய நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. எனினும் அவர்கள் ஒவ்வொரு நாளும் வாசிக்கச் செலவிடும் நேர அளவு வித்தியாசப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இதனை வரைபடம் 03 விளக்குகிறது.




இதற்கமைய குறித்த மாணவர்களில் 42% ஆனோர் தினமும் 11/2 மணிநேரம் தொடக்கம் 1 மணிநேரம் வரைவாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பதையும் 25% ஆனோர் மணித்தியாலத்தை விடக் குறைவான நேரம் வாசிக்கும் அதேவேளை 20% ஆனோர் 1 தொடக்கம் 11/2 மணித்தியாலங்கள் வரைவாசிப்பதையும் 5% ஆனோர் 11/2 தொடக்கம் 2 மணித்தியாளங்கள் வரைவாசிப்பதையும் 8% ஆனோர் தினசரி 2 மணித்தியாளங்களுக்குமேல் தமது வாசிப்புக்காக செலவிடுவதும் கண்டறியப்பட்டது.

எனவே, வரைபடம் 02இல் 97மூ ஆன மானவர்கள் வாசிப்புப் பழக்கத்தைத் தாம் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருப்பினும் அவர்கள் தினசரிவாசிப்புக்காகச் செலவிடும் காலப்பகுதிகள் வித்தியாசமானவையாகும்.

**பல்கலைக்கழக நுழைவின் பின்னரான வாசிப்புப் பழக்கத்தின் நிலை**

இம்மாணவர்களின் பழ்கழைக்கழக நுழைவின் பின்னர் அவர்களது வாசிப்புப் பழக்கத்தில் ஏற்பட்டதாக்கம் தொடர்பில் ஆராய்ந்த போது 67% ஆனோர் தமது வாசிப்புப் பழக்கம் அதிகரித்ததாகவும் 25% வீதமானோர் அதே நிலையிலேயே இருப்பதாகவும் 8% ஆனோர் தமது வாசிப்புப் பழக்கம் குறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 04 விபரிக்கிறது.




இதனூடாக பல்கலைக்கழக நுழைவானது மாணவர்களது வாசிப்புப் பழக்கத்தில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஏனெனில் பல்கலைக்கழக நுழைவின் பின்னர். அவர்களில் பெரும்பாலானோரின் (67%) வாசிப்புப் பழக்கம் அதிகரித்துள்ளது. எனினும் பல்கலைக்கழக நுழைவானது குறிப்பிடத்தக்க தொகையினரின் (25%) வாசிப்புப் பழக்கத்தில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

### நிகழ்நிலைக் கற்கை முறையூடாகக் கல்வியைத் தொடரும்போது வாசிப்புப் பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றம்

பாரம்பரிய கற்பித்தல் முறையில் பல்கலைக்கழகத்தில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பழகியிருந்த மாணவர்கள் உலகளாவிய ரீதியாக ஏற்பட்ட கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக (2020/05/11 தொடக்கம் 2020/08/24 வரை) மூன்று மாதங்களுக்கு மேலாக தமது முழுமையான கல்வி நடவடிக்கைகளை நிகழ்நிலையூடாக மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. இவ்வாறு மேற்கொண்டதன் விளைவாக தமது வாசிப்புப் பழக்கத்தில் மாற்றம் ஏற்பட்டதாக 88% ஆன மாணவர்கள் குறிப்பிட்ட அதேவேளை அவ்வாறு மாற்றம் ஏற்படவில்லை என 12% ஆனோர் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 05 விபரிக்கிறது.




இதனூடாக குறித்த மாணவர்கள் தமது வீட்டிலிருந்து கல்வி நடவடிக்கையைத் தொடர்ந்தமையானது அவர்களில் பெரும்பான்மையானோரின் (88‰) வாசிப்புப் பழக்கத்தில்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டது. மேலும் குறித்ததாக்கமானது எவ்வாறானதாகக் காணப்பட்டது என்பதனை வரைபடம் 06 விளக்குகிறது.




இதனுடாக வரைபடம் 05இல் மாணவர்களில் பெரும்பான்மையானோர் (88மூ) தமது வாசிப்புப் பழக்கத்தில் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட மாற்றமானது பாதகமான மாற்றமாகும் என்பது கண்டறியப்பட்டது. ஏனெனில் அவர்களில் அதிகமானோர் (71%) இக்காலப்பகுதியில் தமது வாசிப்புப் பழக்கம் குறைவடைந்ததாகவே குறிப்பிட்டுள்ளனர். எனினும் அவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் (29%) இக்காலப் பகுதியில் தமது வாசிப்புப் பழக்கம் அதிகரித்து ள்ளதாகக் குறிப்பிட்டிருப்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது.

### வாசிப்புப் பழக்கம் குறைவடைவதில் செல்வாக்குச் செலுத்தியகாரணிகள்

குறித்த மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்தமைக்கான காரணங்கள் தொடர்பாக ஆராய்ந்தபோது அவர்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 121 பேரும் அக்கேள்விக்கு பதிலளித்திருந்தனர். இக்கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வுகள் தெரிவு செய்யப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இலத்திரனியல் சாதனங்களில் வாசிப்பது கடினம் (62பேர்), நூலகம் இன்மை (61 பேர்), வீட்டு மீலைகள் (51 பேர்), சமூக ஊடகங்கள் (41 பேர்), சோம்பல்(41பேர்),வேலைப்பளு(38பேர்), தூக்கம் (35 பேர்), னுயவய செலவு அதிகரிப்பு (27 பேர்), நண்பர்கள் (10 பேர்), வாசிக்க விருப்பமின்மை (8 பேர்) மற்றும் மொழியறிவு இன்மை (5 பேர்) போன்ற காரணிகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இதனை வரைபடம் 07 தெளிவுபடுத்துகிறது.



இதனடிப்படையில் இலத்திரனியல் சாதனங்களில் வாசிப்பதுகடினம் (62) மற்றும் நூலகம் இன்மை (61பேர்) ஆகிய இருகாரணிகளேமாணவர்களின்வாசிப்புப் பழக்கம் குறைவடைவதில் அதிகம் செல்வாக்குச் செலுத்திய காரணிகளாகவும் நண்பர்கள் (10 பேர்) மற்றும் வாசிக்க விருப்பமின்மை (8 பேர்) ஆகியவையே அவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் மிகக் குறைவாக செல்வாக்குச் செலுத்திய காரணிகளாகவும் கண்டறியப்பட்டது. அத்தோடு வீட்டு மீலைகள் (51 பேர்), சமூக ஊடகங்கள் (41 பேர்), சோம்பல் (41 பேர்), வேலைப்பளு (38 பேர்), தூக்கம் (38 பேர்) மற்றும் data செலவு அதிகரிப்பு (27 பேர்) போன்றவையும் மாணவர்களின் வாசிப்பு குறைவடைவதில் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்குச் செலுத்தியுள்ளன. மேலும் வாசிப்பு குறைவடைவதற்கான காரணங்களுள் நூலகம் இன்மை (61 பேர்) இரண்டாவது முக்கியமான காரணியாக குறிப்பிடப்பட்டமையானது மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் பல்கலைக்கழக கல்விச் சூழல் மற்றும் நூலகம் என்பவற்றின் செல்வாக்கைத் தெளிவுபடுத்துகிறது. அத்தோடு வாசிக்க விருப்பமின்மை (8 பேர்) அவர்களது வாசிப்புப் பழக்கம் குறைவடைவதற்கு குறைவாக தாக்கம் செலுத்தியமையானது அவர்களிம் வாசிக்க ஆர்வம் இருப்பதையும் வேறுகாரணிகளே அவர்களது வாசிப்பு குறைவடைவதில் தாக்கம் செலுத்துகின்றன என்பதை உணர்த்துகிறது.

## இணையத்தில் வாசித்தல்

குறித்த மாணவர்கள் வீட்டிலிருந்து கல்வியைத் தொடர்ந்த காலப்பகுதியில் தாம் இணையத்தினூடாக வாசிப்பை மேற்கொண்டதாக 90% ஆன மாணவர்கள் குறிப்பிட அவ்வாறு வாசிக்கவில்லை என 10% ஆனோர் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 08 தெளிவுபடுத்துகிறது.




இதனூடாக உரு 07 இல் அவர்களின் வாசிப்பு குறைவடைவதற்கான முதன்மைக் காரணியாக நூலகம் இன்மை குறிப்பிடப்பட்டிருப்பினும் மாணவர்கள் வீட்டிலிந்து தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்த காலப்பகுதியில் அவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் (90%) இணையத்தில் வாசித்ததாதகக் குறிப்பிட்டதனூடாக இக்காலப்பகுதியில் அவர்களின் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்திருப்பினும் அப்பழக்கம் முற்றாக இல்லாமல் போகவில்லை என்பது தெளிவாகிறது.

## இணையத்தில் வாசித்தமைக்கான செலவு அதிகரிப்பு

இக்காலப்பகுதியில் மாணவர்கள் இணையத்தில் வாசிப்பை மேற்கொண்டமையால் ஏற்பட்ட னுயவய பாவனைக்கான செலவு அதிகரிப்பானது தமக்கு சுமையாக இருந்ததாக 72% ஆனோர் குறிப்பிட்ட அதேவேளை அவ்வாறு இல்லை என 28% ஆனோர் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 09 விபரிக்கிறது.





இதனூடாக குறித்த மாணவர்கள் தமது வாசிப்புக்காக இணையத்தைப் பயன்படுத்தியிருப்பினும் அதனூடாக அவர்களது data பாவனைக்கான செலவு அதிகரித்துள்ள அதேவேளை அது அவர்களில் அதிகமானோருக்கு (72%) சுமையாக அமைந்திருப்பது கண்டறியப்பட்டது. எனினும் அவர்களில் குறிப்பிடத்தக்க

தொகையினருக்கு இது சுமையாக அமையவில்லை என்பது அவதானிக்கக்கத. அத்தோடு வரைபடம் 07 இல் மாணவர்களின் வாசிப்பு குறைவடைவதற்கான முக்கியகாரணிகளுள் ஒன்றாக னுயவய பாவனைக்கான செலவு அதிகரிப்பு குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை உறுதிப்படுத்தும் விதமாக வரைபடம் 09 இல் data பாவனைக்கான செலவு அதிகரிப்பு தமக்கு சுமையாக அமைந்ததாக அதிகமான மாணவர்கள் குறிப்பிட்டிருப்பது அவதானிக்கத்தக்கது. எனவே, இணைய வாசிப்பின் மூலம் ஏற்பட்ட data பாவனை செலவு அதிகரிப்பானது மாணவர்களின் வாசிப்பு குறைவடைவதற்கான காரணிகளுள் ஒன்று என்பது தெளிவாகிறது.

### வாசிக்கும் மூலம்

குறித்த மாணவர்கள் வீட்டிலிருக்கும் போது வாசிக்கும் மூலங்களை ஆய்வுக்கு உட்படுத்தியபோது 35% வீதமானோர் மென் பிரதி (soft copy) இன் ஊடாக மாத்திரம் வாசிப்பதையும் 9மூ ஆனோர் வன்பிரதி (hard copy) இன் ஊடாக மாத்திரம் வாசிப்பதையும் 56% ஆனோர் இரு முறைகளின் ஊடாகவும் வாசிப்பது கண்டறியப்பட்டது. இதனை வரைபடம் 10 விளக்குகிறது.




இதனூடாக அதிகமான மாணவர்கள் (56%) தாம் வாசிக்கும் போதுவன்பிரதி (soft copy) மற்றும் மென்பிரதி ஆகிய இரண்டினூடாகவும் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளமை கண்டறியப்பட்டது. அத்தோடு அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் (35%) மென் பிரதி (hard copy) ஊடாக மாத்திரமே வாசிக்கின்றனர் என்பதும் இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கது.

### மென்பிரதி வாசிக்க பயன்படுத்தும் சாதனம்

மாணவர்கள் மென்மை நகலை வாசிப்பதற்காகப் பயன்படுத்தும் இலத் திரனியல் சாதனங்கள் தொடர்பில் ஆராய்ந்தபோது அவர்களில் 85% ஆனோர் திறன்பேசிகளையும் 13% ஆனோர் கணினி அல்லது மடிக்கணினிகளையும் 2% ஆனோர் Tab / Ipad பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 11 விளக்குகிறது.





இதனூடாக மாணர்களில் மிக அதிகமானோர் (85%) மென்பிரதியை வாசிக்க தமது திறன்பேசிகளையே பயன்படுத்துகின்மை கண்டறியப்பட்டது. அத்தோடு மிகக் குறைவானவர்களே (2%) மென்மை நகலை வாசிப்பதற்காக Tab / IPad ஐப் பயன்படுத்துகின்றனர். அத்தோடு மாணவர்களிடம் கணினி அல்லது மடிக்கணினி வசதி குறைவாகக் காணப்படுகின்றமையே தமது திறன் பேசிகளை வாசிப்புக்காக அதிகம் பயன்படுத்து வதற்கான முக்கிய காரணமாகும்.

### இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகள்

குறித்த மாணவர்கள் மென்பிரதியை (Soft Copy) வாசிக்க இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தும் போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்த போது அவர்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 121 பேரும் அக்கேள்விக்கு பதிலளித்திருந்தனர். இக்கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வுகள் தெரிவு செய்யப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் நீண்ட நேரம் வாசிப்பது கடினமாக இருத்தல் (89 பேர்), அதிகநேரம் வாசிப்பதால் தலைவலி ஏற்படுதல் (87 பேர்), புத்தகத்தை

கையில் எடுத்து வாசிப்பது போன்ற உணர்வு ஏற்படாமை (73 பேர்), சலிப்பு ஏற்படுகின்றமை (71 பேர்), சிறிய எழுத்துக்களில் இருப்பதால் வாசிக்க முடியாமை (60 பேர்), அதிகநேரம் தேவைப்படல் (45 பேர்) மற்றும் இலகுவில் மறந்துவிடல் (35 பேர்) போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குவது கண்டறியப்பட்டது. இதனைவரைபடம்12தெளிவுபடுத்துகிறது.




இதனூடாக இலத்திரனியல் சாதனங்கள் ஊடாகவாசிக்கும்போதுநீண்டநேரம்வாசிக்க முடியாமை (89 பேர்) மற்றும் தலைவலி ஏற்படல் (87 பேர்)ஆகிய பிரச்சினைகள் அதிகளவில் ஏற்படுவதும் இலகுவில் மறந்து விடுதல் (35 பேர்) குறைவாக ஏற்படுவதும் கண்டறியப்பட்டது. அத்தோடு இலத்திரனியல் சாதனங்களின் மூலம் வாசிக்கும்போது புத்தகத்தை கையில் எடுத்து வாசிக்கும் உணர்வு ஏற்படாமை (73 மீரீ), சலிப்பு ஏற்படுதல் (71 பேர்) மற்றும் சிறிய எழுத்துக்களை வாசிக்க முடியாமை (60 பேர்) போன்ற பிரச்சினைகளும் மாணவர்களில் பலருக்கு ஏற்படுவது இங்கு கவனிக்கத்தக்கது. மேலும் வரைபடம் 07 குறிப்பிடுவது போல் மாணவர்களில் 85மூ ஆனோர் மென் பிரதியை வாசிப்பதற்காக தமது திறன்பேசிகளைப் பயன்படுத்துகின்றமையால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சிறிய எழுத்துக்களில் இருப்பதால் வாசிப்பது கடினமாக உள்ளது என்ற பிரச்சினை தோன்றுவது தவிர்க்க முடியாததாகும். திறன்பேசிகள் அளவில் மிகச் சிறியனவாக இருப்பதே அதற்கான காரணமாகும்.

## முடிவுரை

ஆய்வுக்குட்படுத்தப் பட்ட மாணவர்கள் வாசிப்புடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தனர். தமது ஓய்வு நேரங்களில் பல்வேறு வகையானவற்றை வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். அத்தோடு பல்கலைக்கழக நுழைவானது அவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. எனினும் வீட்டிலிருந்து நிகழ்நிலையூடாக தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்தமையினால் அவர்களது வாசிப்புப் பழக்கத்தில் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டன. அதற்கு பல்வேறு காரணங்கள் ஏதுக்களாக அமைந்திருந்தன. அவர்கள் மென்பிரதி (Soft copy) ஊடாக வாசிக்கும் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். எனினும் பல்கலைக்கழக நுழைவின் பின்னர் அவர்களது வாசிப்புப் பழக்கத்தில் ஏற்பட்ட சாதகமான மாற்றமானது எவ்வகையான சூழலிலும்வாசிப்பைத்தொடர்வதற்குஉந்து சக்தியாக அமைந்திருக்கின்ற அதேவேளை குறித்த மாணவர்கள் தமது வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்துகொள்வதில் எதிர்நோக்கும் சவால்களை முறியடிப்பதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படுமிடத்து அவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் மேலும் சாதகமான பல முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியும் என்பதே இவ்வாய்வின் முடிவாகக் கொள்ளப்பட்டது.

## பரிந்துரைகள்

1. வாசிப்புப் பழக்கத்தின் முக்கியத்தும் மற்றும் அவசியம் தொடர்பிலான வழிகாட்டல்கள் வழங்கப்படல்.
2. வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலான போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படல்.
3. வீட்டில் சிறிய வாசிக சாலையொன்றை அமைத்துக் கொள்ள ஊக்குவித்தல்.

4. மாணவர்களின் வீட்டுச் சூழல் மற்றும் பல்கலைக்கழகச் சூழலில் வாசிப்புக்குத் தடையாக அமையும் காரணிகளை இனங்கண்டு, அவற்றுக்குப் பொருத்தமான தீர்வுகளை முன்வைத்தல்.
5. இணையத்தினூடாக வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்துக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
6. இலத்திரனியல் சாதனங்களூடாக வாசிப்பதனால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கான நிபுணர்களின் பரிந்துரைகள் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்தல்

## துணைநூற்பட்டியல்


1. அமேயாவ், சாமுவேல் குவாமே மற்றும் அன்டோ. (2018) சில்வெஸ்டர் குவாபெனா, *"படிக்க அல்லது அழிக்க: மாணவர்களிடையே வாசிப்பு பழக்கம் மற்றும் கல்வி செயல்திறன், அதன் விளைவு: ஈஸ்ட் பேங்க் மூத்த உயர்நிலைப் பள்ளியின் வழக்கு ஆய்வு - அக்ரா"*, நூலக தத்துவம் மற்றும் பயிற்சி (மின் இதழ்), 1748.
2. சேத்ரி % குஷ்மீதா. (2013). *வாசிப்பு பழக்கம் - ஒரு கண்ணோட்டம்.* IOSR ஜர்னல் ஆஃப் ஹ்யுமனிட்டீஸ் அண்ட் சோஷியல் சயின்ஸ், 14:13-17, .
3. எர்டெம்,அலியே. 2015. பல்கலைக்கழக மாணவர்களின் வாசிப்பு பழக்கவழக்கங்கள் பற்றிய ஆராய்ச்சி: (அங்காரா பல்கலைக்கழகம் மற்றும் எர்சியஸ் பல்கலைக்கழகத்தின் மாதிரி), ப்ரோசிடியா - சமூக மற்றும் நடத்தை அறிவியல், தொகுதி. 174, பிப்ரவரி, பக்.3983-3990.
4. ஜிமிங், லியு. (2005). *டிஜிட்டல் சுழலில் வாசிப்பு நடத்தை: கடந்த பத்து ஆண்டுகளில் வாசிப்பு நடத்தையில் மாற்றங்கள்*, ஆவண இதழ், தொகுதி 61, எண் 6, பக்.700-712.
5. ஜிமிங், லியு., (2005). டிஜிட்டல் சுழலில் வாசிப்பு நடத்தை: கடந்த பத்து ஆண்டுகளில் வாசிப்பு நடத்தையில் மாற்றங்கள், ஆவண இதழ், தொகுதி 61, எண் 6, பக்.700-712.
6. மஷ்ரூஃபா, எம்.எம். (2017). வாசிப்பின் முக்கியத்துவமும் பிள்ளைகள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதன் அவசியமும் வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் குழந்தைகளிடையே (வாசிப்பை ஊக்குவிக்க வேண்டிய அவசியம்) இ-சிட்டி காலேஜ் ஆப் ஆங்கிலம் மற்றும் ஐடி திறன் மேம்பாடு
7. முஸ்தபா மிஸ்ரா. (2020). வாசிப்புத் திறனை விருத்தி செய்வதற்கான 10 வழிகள் (வாசிப்பு திறன்களை வளர்ப்பதற்கான 10 வழிகள்), டீச்மோர், ஜூன். 2020.
8. சேகரன், *ராஜா. (2016). வாசிக்கும் பழக்கம்*, பஹாசா தமிழ் யு.பி.எஸ்.ஆர்,.
9. சிங், உம்ராவ், இந்தூர் நகரத்தின் எல்.ஐ.எஸ் மாணவர்களிடையே வாசிப்பு பழக்கம் பற்றிய ஆய்வு. (எம்.பி.) (வெளியிடப்படாத மாஸ்டரின் ஆய்வறிக்கை), தேவி அஹில்யா விஸ்வவித்யாலயா, இந்தூர்.
10. ஜூனூமி, எம்.எஸ்., ஷிப்லி, எஃப். எச். ஏ. ரூ ஆசன், ஏ.பி.எம். நூலகத்தை உபயோகிப்பதில் பல்கலைக்கழக மாணவர்களின் ஈடுபாடு: ஓர் மதிப்பீடாய்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு அரபு மற்றும் இஸ்லாமிய ஆய்வுகள் மூலம் நிலையான அபிவிருத்தி தொடர்பான 5 வது சர்வதேச சிம்போசியத்தின் நடவடிக்கைகள், 29-28